உ

டிராமாகம்பெனிகளில் ஆடிவருகிற
சீதாபஹரணமென்னும்

ராவணன் சீதையை

யெடுத்தேகும்பாகம்.

இதில் நாதனைபதங்களும், ஒரடிகளு
ம், தர்க்கங்களும், இந்துஸ்தா
னிராகதாளமமைத்தபாடல்
களும் ஒருங்குசேர்த்து

முதல்பதிப்பு காப்பி 1000.

ஸ்ரீஜெயலக்ஷ்மிவிலாசநாடககம்பெனி
உபாத்தியாயராகிய
மோ-சுந்தரமுதலியாரவர்களால்
இயற்றப்பட்டு,

சென்னை தாண்டவராயபிள்ளைதெரு நெ-17
கிருபாலக்ஷ்மிவிலாசஅச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

1908

M. செல்லப்பன்

செப்பனிடுவதற்காக எடுத்துக்
கொள்ளப்பட்ட

மாதம் டிசம்பர் வருடம் 1982

செப்பனிட்டு முடித்த டிசம்பர்

மாதம் 1982 வருடம்

ஆராய்ச்சி உதவியாளரின்
கையொப்பம்

உ

டிராமா கம்பெனிகளில் ஆடிவருகிற
சிதாபஹரணம் என்னும்

ராவணன்சீதையை

யெடுத்தேகும்பாகம்.

இதில் நூதனபதங்களும், ஓரடிகளும், தர்க்கங்களும். இந்துஸ்தானிராகதாளமமைத்தபாடல்களும் ஒருங்குசேர்த்து

முதல்பதிப்பு

காப்பி 1000.

ஸ்ரீஜெயலக்ஷ்மிவிலாசநாடககம்பெனி
உபாத்தியாயராகிய
மோ-சுந்திரமுதலியாரவர்களால்
இயற்றப்பட்டு,

சென்னை தாண்டவராயபிள்ளைவீதி (செ-17)
கிருபாலக்ஷ்மிவிலாச அச்சுக்கூடத்தில்
பதிப்பிக்கப்பட்டது.

ரிஜிஸ்டர் காப்பிரைட்.

விலை 1908 அணா2.

OFFICE OF THE ... 14 A... 1908 MADRAS.

உ

கடவுள் துணை

ரிஜிஸ்ட்டர் அறிவிப்பு

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரியப்படுத்துவது யாதெனில், சகலடிராமா கம்பெனிகளில் நடாத்திவருகிற சீதாபஹரணமென்னும் ராவணன்சீதையையெடுத்தேகும்பாகத்தை ஸ்ரீஜெயலக்ஷ்மிவிலாச நாடகஉபாத்தியாயராகிய மோ-சந்திரமுதலியாரா லியற்றப்பட்டதை சென்னை கவர்ன்மெண்டாரவர்களது 1867 வது வருஷத்திய 25-வது ஆக்டின் 20-வது பிரிவின்-6-வது விதியின் பிரகாரம் இந்நூலை காப்பிரைட் ரிஜிஸ்ட்டர் செய்யப்பட்டிருக்கிறது ஆகையால் இந்நூலுக்குடையவராகிய மோ-சந்திரமுதலியாரனுமதியின்றி இங்கிலீஷ்இலாகாவிலும் பிரஞ்சு இலாகாவிலும் யாரும் அச்சிடக்கூடாது. அப்படி அச்சிட்டால் அதனாலுண்டாகும் நஷ்டத்தை வசூல்செய்யப்படும்.

இப்படிக்கு,

மோ. சந்திரமுதலியார்.

உ

கடவுள் துணை.

ராவணன்சீதையை யெடுத்தேகும்பாகம்.

விநாயகர் தரு.

லம்போதரா ஹர லம்போதரா ஹர
லலிதசுகுணவொளிதீரா லாவண்யசுகுமாரா லம்
அம்போருகனிலயா அடியேனிடரகற்றுவாயே
சம்புவிபின்பால்பன்மலர் சாட்டினேனென்சேயே
நம்பினேன் வல்லபைநாத நலந்தருந்தருவாய்
பொற்பாதாவெம்பிடு மிடியவர்போதா
வேழமுகபிரக்கியாதா லம்

பரமசிவன் துதி.

இராகம் கன்னடா தாளம் ரூபகம்

பல்லவி

சிவப்பிரகாசனே ஐயன்
சிவங்கியானபோதனே அரனே

அநுபல்லவி.

பெந்நவப்பயனே திரிபுரத்தகனே சத்துச்சித்
தானந்த சற்குணனே தற்பரனே சிவ

சரணம்.

மூத்தர்கள்பணியுமுகூர்த்தங்கொண்டவா
மூவாயிரம்பேர்கள்பணியுந் தாண்டவா
பித்தனெயமனையுதைத்த ஆண்டவா
பிள்ளைக்கரிதனை சமைக்கஉண்டவா
திருமுடதற்பொருள் தாரும் சிற்பராசடைகள்
பாரும்வரமதைக்கொடுத்தருள்செயும்வரித்தி
லிங்கேசனே கடைக்கண்பாரும் சிவ

சீதை

இலட்சுமணன்

ஸ்ரீராமர்.

௧-வது சீன். பஞ்சவடி தீரம்.

சீதை பொன்மானைக்கண்டு வர்ணித்தல்.

தரு இராகம் தோடி தாளம் ரூபகம்

பல்லவி

இந்தமானை அழகுள்ளமானை பொன்மயமானை
புள்ளிமானை கலைமானை மானைமானைபார்க்க
மனமுருகுதே

சரணங்கள்

துள்ளிதுள்ளிபோடுமானைவில்லுபோலெகுருமானை
மானை மானை மானை மானை
குழவியில்லாமனதின்கவலை குறைகள்தீர்க்க
வேண்டுமென்றே கூடிகுலாவிமானைக்கண்டு
விரகம்தீர்க்கவேண்டுமே இந்த

சீதை வ-ம். நாதா இதனுடைய அழகை நானெ
வ்வாறு தெரிவிப்பேன் ஆ ஆ.

சீதை தரு.

இராகம் கேதாரம் தாளம் ஆதி

இந்தமானை நானடைய யேதுயோசனை இந்த
சொந்தமாய் நம்மிடந்தேடி
சொகுசுட நடமாடி இந்த
சந்திரனொளியை நீக்கி விந்தையாகவிளையாடி
இந்தவேளை நம்மிடந்தேடி
அந்தமாக வந்தமானை இந்த

சீதை-வ-ம். நாதா என்னசுந்தரமாக தோணுகி
ன்றது யிம்மான் ஆ ஆ இப்பேற்பட்டமானை யா
ன் எங்கும் காணகிலேன் ஆ ஆ

சீதை தரு.

இராகம் மலையமாருதம் தாளம் திசரகதி

என்ன அச்சரியமிது யித்தில நிகாண்கிலேனே
கன்னைநான் கொண்ட எண்ணம்
உன்னிபார்த்துள்ளங்கொண்டு என்

சொன்னஞ்சிறுத்தயிடை பின்னமில்லாதநடை
விண்ணுலகமானிதுவோ விளம்புவாய்நாதாயின்று
பொன்மாநிதென்கரத்திற் புலகாங்கதம்கொள்ளுதமே
சின்னமான்கரத்தில்தாங்கும் அன்புக்குரியமாறே

சீதை-வ-ம். பிராணேசா தாங்கள் யிதை யெப்படியாகிலும் பிடித்துத் தரவேண்டுமாக்கும்.

இராமர் வசனம்.

ஜானகி உன்னுடையவார்த்தைக்கு எதிர்வார்த்தையுண்டோ அப்படியே பிடித்துதருகிறேன்,

இலட்சுமணர் தரு.

இராகம் நாகசுராளி தாளம் திசரகதி

ஓஹோயிம்மானேதான் உலகத்தில்பொய்மான்
யென்றுன்னதை சொன்னேன் அய்யனே

ஹா ஹா ஹா என்னான்னை எறேபிடிக்குதாயென்றுசொல்கின்றுளே அண்ணாவே ஓ

அன்னைசொல்லாலப்போ அய்யன்தசரதன்
அலங்கோலமானாரே

இந்த அன்னைசொல்லாலென்னமோ அண்ணனுக்கொன்றும் அரியேனே ஓ

மாயமானிது மாய்கைபறிந்துக்கொண்டேன்
மனதுட்கொள்வீரோ அண்ணாவே

காயமோயெந்தன்சொல் கலங்குதேஎன்மனம்
கழலடிபோற்றினேன் அண்ணாவே ஓ

ஊழியக்காரன் நான் உற்றவார்த்தையுரைத்தேன்
ஆழிமழைக்கண்ணா அண்ணாவே

ஏழைசொல்லம்பலம் யேற்குமோஎன் வார்த்தை
தாதிஷ்டப்படிக்கு செய்வீரா ஓ

இலட்சு-வ-ம். அண்ணா யான்எனதுமனதுபூர்த்தியாய்தெரிவிக்கின்றேன் அதாவது யிம்மானே

பொன்மானல்ல ஆ, ஆ என்னவிபரீதம் பொய்மான்
தான் அண்ணா ஆதியில் நம்முடைய அயோத்தியி
ன்கணே ராமனு அன்னையாகிய கைகேயியின் வார்
த்தைக்கேட்டு நம்பிதாவாகிய தசரதன் என்ன அல
ங்கோலமானார் அது தமக்கு தெரிந்தவிஷயமேயொ
ழிய தாம் அரியாததல்ல யிட்சணம் தாங்கள்செ
ன்று பிடித்துவருவேனென்ற யெண்ணத்தைவிட்
டுவிடும் பெண்புத்திபைப்பற்றி பிரயத்தினப்படுவ
தில் பயனில்லை அண்ணா.

ராம-வம். தம்பி இலட்சுமணா அப்படிக்கல்ல, நான்சென்று வருமளவும் ஜாக்கிரதையோடுங் கூடி பாதுகாத்துக்கொண்டிருப்பாய் இதோதுரிதத்திலோடி பிடித்துக்கொண்டுவருகிறேன்.

இலட்-ண-ம். அண்ணா யான்சொன்ன வார்த்தையைத்தடுத்து செல்வேனென்றாய் யென்னகாலவிபரீதமோ அறியேன் ஆ ஆ

இலட்சுமணர் தரு. இ-ம்-ஏதுகுலகாம்போதி.

காலத்தையாரறிவார் கடவுளிட்டகோலம்.
கடவுளிட்டகோலம்கடவுளிட்டகோலம்சம்போ கா
லனேயெந்தன் வார்த்தை யிழிவுடனேவிடுத்து
யேகுவேனென்றுரைத்தீ ரென்னகாலம்பிழையோ
மானேமாயமென்று மகிழுடனேவுரைத்தேன்
பேனேயெந்தன்வார்த்தையிழிவுடனேவிடுத்து கா
தப்பிதஞ்சொல்லறியேன் நயனேஎன்வார்த்தை
தடவுடனேகேட்பிராகில் அகமதுகளித்திருப்பீர்

இலட்-வ-ம். அண்ணாயான் தெரிந்தமட்டிலுமுரைத்தேன் அதைதாங்கள் அங்கீகரியாமல் பெண்வாக்கை பெரிதாகயெண்ணி செல்வேனென்றுரைத்தீரண்ணா பீறகுயென்ன கெடுதி சம்பவிக்குமோ அறியேன்.

ஸ்ரீராமர்மானைபிடிக்கும் தரு.
வனமேவட்டையாடபோரேனிதோ
யென்றவானமெட்டு.

இந்தமானைபிடிக்கசெல்குறேன் யிந்தமானைபிடிக்க
செல்குறேன் யிந்தமானைபிடிக்கசெல்குறேன்

கானகந்திரும்பி கடுகியோடுததோ
ஜானகிமனதின்படி குணமதாகவே   இந்த
விரைவிலோடியே வேகமாய்ப்போகுது
நரை நடை வரும்படி வதைக்கிறேனிதோ
கானகந்தனில்கடந்த கபடமானிதுவோ
கரத்திற்கிட்டாமல் கானகந்திரும்பாமலே   இந்

யிங்குஸ்ரீராமர் மாரிசன்மீது பாணம்யெய்தல்·

மாரிசன் வ-ம்   இலட்சுமணா அபயம்

உ.வது-சீன் சீதை இலட்சுமணர் பிராப்தம்-

சீதை-வ-ம்· ஆஆ பிராணேசா உமக்கு யென்ன ஆபத்துநேரிட்டதோ மைத்துனா தமதுநாமதேயத்தைக்குறித்து அபயம் அபயமென்பதாககானே கூக்குரல்யிடுகின்றாரே நீர்சென்று பார்த்து வருவீர்

இலட்சுமணர்-தரு, இ-ம்-சுருட்டி-, ஆதிதாளம்

பல்லவி.

இப்படியும் யெண்ணலாகுமா யென் அண்ணன்
ராமனை யிவ்விதமாயுரைக்கப்போகுமா

சரணங்கள்.

கோதண்டந்தனை விடுத்தால்முதண்டம் விளங்கிடுமே
பாதகன்மாரிசனங்கே காதகன்வோலமிட்டானே-ம

எண்டிசை அதிபர்களும் அண்டியென்னண்
ணன்முன்னே மண்டினாலும்யென்னண்ணன்
சுண்டுவிரல்போதாதோ   இப்

ஆதிசிவன்வில்லொருவன்யொடிக்கலாகுமோ
அம்மா அப்பேற்பட்ட அண்ணனை நீ
யிப்படியுஞ்செப்பலாகுமா   இப்

அரக்கர்தங்களைக்கண்டு அண்ணனேங்கினின்றால்
இருக்குமாயிப்பூமியெல்லாம் என்னமாயமம்மா இ

[illegible]-வ-ம். அம்மா யென்னவார்த்தையுரைத்தீர் யென தமையனாகிய ராகவனையென்னவென்று நினைத்துக்கொண்டீர் யெண்டிசை அதிபரியாவரும் கூடி யென் அண்ணன்மீது படையெடுத்துவந்தாலென் அண்ணனாகிய ராகவனுடைய சுண்டுவிரல்

11958

போதாதோ அல்லது வெண்ணைக்குப்பல்முளைத்தா
ப்போல் அந்தராட்சதகூட்டங்கள்வ[illegible]க்கொ
ண்டாலென் அண்ணன் அவர்களைக்கண்டு ஏங்கிம
யங்கி தியங்கிநின்றால் மந்திரமேது தந்திரமேது
வானத்தில் சந்திரனுநிப்பானு இந்திரன் கதிப்பா
னு ஆஆ அக்காலத்தில் ஐம்பத்தாறுதேசத்து அர
சர்களால் ஒடிக்கப்படாதவில்லை ராசவனுடையபெ
ரியவிரல்பட்டமாத்திரத்தில் பளீர்பளீரென்றொடி
ந்துவிழுந்ததை அறியீரா அதுதவக்குத் தெரிந்தி
ருந்தும் தாங்களென்னையிப்படிசோதிப்பது அழ
கா,

சீதை-வ-ம் மைத்துன தீர்தானு அவருடன்பிற
ந்தவர் தான் ஆடாவிட்டாலும் தன்னுடைய சதை
யாடுமென்று பெரியோர்கள்சொல்லும் பழமொழி
போலஉமக்கு அண்ணனுச்சுதேயென்ற பெண்ணை
க்கொள்ளவில்லையே உன்னுடையமனம் பொன்னா
கல்லா இரும்பாபெரும்பாறையா சற்றேனும்இளை
க்கவில்லையே,

சிதை தரு, இ-ம்- நாககுராளி தாளம் திசரகதி
அண்ணனை அகற்றிற்று அண்ணிபர்மேலாசை
யாரேனுங்கொள்வார்களுண்டோ
இந்நிலத்தென்மனம் புண்ணாகுதையோ
குண்ணியே சாகின்றனே அ
சீதை-வ-ம், அய்யோ யென்மனம் பதருகின்றதே
நம்முடைய் கணையன்போய்விட்டால் நம் அண்ணி
யை யெண்டாளலாமென்று யெத்தனங் கொண்டீ
ரோ.

இலட்-வ-ம். அரி அரி கிருஷ்ணா எ ஆட்த்சகா
யா அம்மாயென்னவார்த்தை தெரிவித்தீர் இதோது
ரிதத்தில்பார்த்துவருகிறேன் இந்த அடையாளத்து
க்குள்ளிருப்பீர்

இராவணசந்நியாசி

சீதாபிராட்டி

௩-வது சீன். இராவணசந்நியாசி பிராப்தம்.

தாளம்திசரகிதி, இ-ம் நாதாம்பிரை.

அமுதலித்திடுவா ரிங்குளரோ இந்த
ஆரண்யநகரிலென்முன் ஆவலாய் நாடி
அமரலிங்கேசனை துதித்து யிரவும்
பகலும்பாய் அரனை மதித்து அமு
மனதுகினியமானைதேடி இந்த மண்டலந்
தனில்வந்தே னேடி அமுதலித்திடுவா

சீதை-தரு-இதுவுமது

ஆண்டியே நீரிங்கேவாரும்இதோ
யமுதளிக்கிறேனிதைக்கோரும்
இந்தவனத்திலெங்கேவர்திர்மந்த
கானகந்தனிலென்கடநதிர்
உங்கள்வரமென்னசொல்லும்
தங்கள்நாமதேயமெனக்குவிள்ளும் ஆண்
சீதை வ-ம் ஐயா தாங்களெவ்விடமிருந்து புறப்பட்
டுயிவ்வளவு வருத்தமாய்வருகிறீர் தாங்கள்யார்

இராவணன்-தரு-இதுவுமது.

...தனிங்கொருகாரியம் யெந்தன்
மனதுகினியமானைத் தேடி
பேராய்பெரியவன்தானேபிரம்ம
தேவனுக்குபேரன்தானே
சிவமான புனைவாளும் கரத்தில்
ஆதிசிவன் கையில்பெற்றவன் தானே வந்தே
இராவணன் வ-ம் தேவேந்திரனுக்கு தேவேந்தி

ரனானவனும் எவர்களுக்குமெழுதமுடியாத சுந்த
ரமுடையவனும், பிரமகுலத்தில் பிறந்தவனும்,
தேவர்களெல்லார் சிக்ஷைரக்ஷைசெய்யும்படியா
கிய சக்தியுடையவனும், அரியவேதங்களை யெல்
லாம் தனக்குள்தானறிந்தவனும், வெள்ளியங்கிரி
யை அசைத்து பிடுங்கினவனும் அஷ்டகஜங்களு
டையதந்தங்களை பொடி பொடியாய்போக்கடித்தவ
னும் தேவர்களெல்லாம் கடைவாசலிலிருந்துசேவ
ல்செய்யத்தக்க பிரதாபமுடையவனும் புஷ்பவிமா
ன முண்டானவனும் முடிவில்லாததீர்க்காயிசுடைய
வனம் சிவன் வாளைக்கையில்தரித்தவனும் மன்மதன்
கண்டு மகிழ்ச்சிகொல்லத்தக்க யெவ்வனமுடையவ
னும் சகலஸ்திரீஜாதிகளும் அவன்மீதி லிச்சித்திருக்
க அவாளை கவனியாமல் தன்மனதுக்கினிய மாலத
சேரிக் கொண்டிருக்கிர அந்தலங்காபுரிப்பட்டண
த்தை ஆண்டுக்கொண்டிருக்கிர தசமுகனிட நாட்
டிற்க்குசிலதுநாள் சென்றிருந்தேன் நான் முந்தியி
ங்கிருந்தவர் தான் தாங்கள் யார்தெரிய[illegible]ருவீர்

சீதை-தரு இதுவுமது.

தசரதன்பாலகனிருவர்தன்னில்
மூத்தவர்பெண்டரிவீர்தானோ
கேளீரோயென்சுவாமிபேரை நாளை
இன்றெறிவா ரவன்பாரை
ஆயிரம்புஜமுள்ளகார்த்த அந்த
வீரியனை அடித்தாரென்நாதன் (ஆயிரம்)

சீதை வ-ம். ஐயாநீர் கானகத்திலிருக்கும் பரமயாகி
ய ரிஷீஸ்வரரிடத்தில்யில்லாமல், தர்மநெறியை ய
றியாத ராக்ஷஸாளிடத்தில்போய் யிருக்கலாகுமா.
இராவணன் வ-ம் ராக்ஷதால்தேவர்களுக்குகெட்ட
வர்களேதவிரயெங்களைப்போலவற்குநல்லவர்தான்
சீதை வ-ம் ஐயாதாங்கள்யாதோபெரியவரென்றுயா
ன்மதித்துவார்த்தையாடினால் கேவலம் ராக்ஷஸ
டைக்ளை பெறுமையாய் பேசுநீர் போம் போம்

இராவணன் தன் சுயரூபம் காட்டல்

இ-ம். தோடி, தாளம் ரூபகம்

பல்லவி.

பாரடி என்னழகை அடி பைங்கிளியே சீதாங்கனி
பரிவுடனேயிங்குவந்தேன் பாரடி

அநுபல்லவி.

சீருட னெந்தனை சேர்ந்தாலுந்தனுக்கு ஆரடி.
நிகரிந்த அவனியிலுந்தனுக்கன்புடன் பாரடி.

சரணங்கள்.

பத்துசிரசுகளும்யிருபத்துக் கரங்களும்
பகைஞ்ஞரைவென்றிடும் பலாபலங்களும்
யெத்திசையோர்களும் யெந்தனை போற்றிட
எந்தனைநம்பினல்உந்தனுக்கிணையாரடி பாரடி
மானிடராமனை புகழ்ந்துமாதாக்கரசியென
யிகழ்ந்து
மங்கையேவாதுநீ செய்யாமல்கூடடி
மானேதேனேகுயிலே மடமயிலே
வனக்குயிலேபாரடியென்னழகை பாரடி

ஜ-ம்-அடாணு, தாளம்-ஆதி.

அடடா அடடா விடடாசீதையை
கடாநடுவிலேசாகாதே அடடா
தயிவள்மனம்நொந்தால் தரிப்பாயோபூமியில்
மாயமாய்வந்துதித்த மாதுலட்சுமியடா அடடா
என்தாய்மனம்நொந்தால் இருப்பாயோ
ஏனடாநடுவிலே முரியாதே
இருப்புந்தூணைசெல் எரிக்குமோ
சொரூபத்தைதெரியாமல் நரகததில்விழாதே
சொன்னேன்சொன்னேனடா சுருதியில்சாகாதே
ஜானகியையிங்குவையடா ஜடுதியில்
நானேகொண்டோடு வேன்
பாரடாயில்லாவிட்டா லுந்தனை
பதைக்கவாட்டுவேன் யிக்ஷணம்
கூரானமூக்காலே கொக்கரித் துந்தனை பாரடாயித்
ததிபதைக்க செய்குரேனிதோ அடடா

ஜடாயு வ-ம் அடா ராவணா ஜானகியையிவ் வுலக
த்துஸ்ரீகளைப்போலனினைத்தாயேசண்டாலாவிட்டுவி
டுவாய் யில்லாவிடி லுன்னை பஞ்சுபஞ்சாய்ஜாடிவிடு
வேன்முட்டாலே

இராவணன் வ-ம் அடாசாடாயு வுன்சிறகைதுண்டி
க்கேன்யிப்பொழுதுசண்டைசெய்யார்ப்பெரம்

௬ வது சீன். இராவணன் ஜடாயு சிறகைவெட்டுதல்
இங்கு ஜடாயு விழவே சீதை புலம்பல்.
மங்கைநான் தயங்குரேன். யென்றவர்ன மெட்டு

கோதை நான் தங்குறேனிங்குவேறொரு
வரைக் காணனே பாதகன்வஞ்சனையாக
பரதவிக்க கானகத்தில்
நீதாகமாமனை யிங்கேதிடுக்கெனவெட்டி நானே
கானகம்தனிலேவந்து கண்முன் யிந்த மாமனைக்
கொன்ற வீனேராவணன் செய்தவிதி மோசம
ரியாறோ.) மான்பின்போன மன்னவரங்கு ம
திமயங்கிதிகைத்திட்டாரோ மன்ராடியே
தம்பியுடன் மார்கம்கண்டுவருகின்றாரோ. (கோ)
சிதை வ-ம் ஆ கிளிகளே மயில்களே குயில்களே
மலைகளே, தேவர்களே நீராகிலும்யென்பிராணேசரி
டம்சொல்லீரா, ஆதெய்வமே

௭ வது சீன் லக்ஷ்மணர்ஸ்ரீராமரை காணுதல்
ஸ்ரீராமர் வ-ம் தம்பியேனவந்துவிட்டாய்
லக்ஷுமணர் வ-ம் அண்ணா தங்களைகணடுவரும்படியா
ய்யெனதன்னை ஜானகியார் அனுப்பினார்!

௮ வது சீன் பஞ்சவடி ஸ்ரீராம் ஜானகியைகாணாமல்
ஸ்ரீராமர் புலம்பல் தரு.

பொல்லஅரக்கனை கண்டுஞ்சினாளோ கோதை
பூனையைகண்டகிளியைபோல புலம்பினாளோ பேதை
குகையில் சிங்கத்தைகண்டகுஞ்சரம்போல்மங்கினா
ளோ
மதிமோசமோ யெந்தன் விதிவசமோ அரியேன்
ஆருமில்லா கானகத்தில் அதட்டினாரோ நீதாய்
ஐயையோ தம்பிசொன்னதை யரியாமல்போனனே.
பர்ணகசாலைவிடென்று. பாவித்துயிருந் தேனே
பதைக்குதே யெந்தன்மனம் பாழும் மான்
செய்தமோசம் பொல்லா.

ராவணன்சிதைய்யையெடுத்தேகும்பாகம்,
முற்றிற்று.

வாலிவதம் உடனே வெளிவரும்.